குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.154/2020

அ.சா.2

2023–ம் ஆண்டு அக்டோபர் 06–ம் தேதி வெள்ளிக்கிழமை அரசு தரப்பு சாட்சி 2–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.செல்வி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.ஏழுமலை | ஜாதி | |
| தந்தை பெயர் | வீரப்பன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 04.50 மணி,

Accused (Dhineshram) present. Advocate Mr. T.Ranganathan present for accused. APP Mr.Suresh Present.

**முதல் விசாரணை.**

1. நான் ரங்கப்பனூரில் குடியிருந்து கொண்டு காளான் கடை வைத்துள்ளேன். 25.11.2017.ம் தேதி என் கடை முன்பாக தருமபுரி டூ ஓமலூர் சாலையில் விபத்து நடந்துள்ளது. சம்பவத்தின் போது நான் கடையில் இல்லை. மறுநாள் காலை 11.00 மணியளவில் போலீசார் வந்து சம்பவ இடத்தில் விசாரித்து குறியீடு செய்தார்கள். அப்போது நான் அங்கு இருந்தேன்.

2. என்னிடம் சாட்சி கையெழுத்து கேட்டார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். (அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**.

3. நான் சுமார் 7 வருடங்களாக கடை வைத்துள்ளேன். நான் கடைவைத்துள்ள இடம் எனக்கு சொந்தமானது அல்ல. எனது கடையின் எண் எனக்கு தெரியாது. சம்பவம் நடந்த ஓமலூர் டூ தருமபுரி மெயின் ரோட்டின் இடையே ஒரு அடி உயரம்

தடுப்பு சுவர் உள்ளது என்றால் சரிதான். எனது கடைக்கு அருகில் புதுதெரு என்ற சாலை உள்ளது என்றால் சரிதான். ஓமலூர் டூ தருமபுரி மெயின் ரோட்டில் புது தெருவில் இருந்து பெரியமாரியம்மன் கோவில் செல்வதற்கு வாகனங்கள் செல்வதற்காக டிவைடர் இல்லை.

4. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. விபத்தில் இறந்த அருணாசலம் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வந்து புதுதெரு அருகே கிழக்கு நோக்கி திரும்பி போது விபத்து ஏற்பட்டதாக படம் வரைந்து கையெழுத்து பெற்றார்கள். விபத்திற்கு மறுநாள் எனது கடையில் இருந்த போது கையெழுத்து போட்டேன். நான் மாதிரி வரைபடம் தயார் செய்த போது சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், போலீசார் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை. இல்லை.

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 05.05 மணி,

சாட்சி. ஏழுமலை

ஓம்/-S.ஷர்மிளா,

குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.